**தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்**
**எண்.100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032.**
**தொலைபேசி: 044 – 22201337**
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

முன்னிலை : மு. மாலிக் பெரோஸ் கான், இ.ஆ.ப (ஓ)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்
*******

ஆணை எண். 11/ந/2020
நாள். 07.03.2022

திரு.எம்.எஸ்.முஹம்மது சால்ஹு,
சென்னை. – முறையீட்டு மனுதாரர்

ஆணையாளர்,
காயல்பட்டணம் நகராட்சி. – எதிர்மனுதாரர்

சென்னை, முத்துமாரி செட்டி தெரு, பழைய எண்.37, புதிய எண்.86 என்கிற முகவரியில் வசிக்கும் திரு.எம்.எஸ்.முஹம்மது சால்ஹு என்பவரின் 12.01.2020 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 13.01.2020 அன்று பெறப்பட்டு 011/ந/2020 என்ற எண்ணிட்ட முறையீட்டு மனுவாகப் பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்கண்டவாறு ஆணை வெளியிடப்படுகிறது.

**ஆணை**

சென்னை, முத்துமாரி செட்டி தெரு, பழைய எண்.37, புதிய எண்.86 என்கிற முகவரியில் வசிக்கும் திரு.எம்.எஸ்.முஹம்மது சால்ஹு என்பவர் தனது மனுவில்

> "காயல்பட்டணம் நகராட்சியில் டிசம்பர் 2016–ல் 50 துப்புரவு பணியாளர்கள் ஒப்பந்தப்புள்ளி அடிப்படையில் நியமனம் செய்யப்பட விடப்பட்ட ஒப்பந்தப்புள்ளி மூன்றாண்டுகள் நிறைவுற்று, கடந்த அக்டோபர் மாதம் மறு ஒப்பந்தப்புள்ளி காயல்பட்டணம் நகராட்சியினால் கோரப்பட்டு குறைந்த விலைப்புள்ளி வழங்கிய நிறுவனத்திற்கு பணி ஆணை வழங்கப்பட்டுள்ளது. எந்த நிறுவனத்திற்கு இந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கப்பட்டுள்ளது என்ற விபரத்தையும் இதுவரை காயல்பட்டணம் நகராட்சி இணையதளத்தில் பதிவேற்றம் செய்யவில்லை.
>
> அக்டோபர் மாதம் கோரப்பட்டுள்ள ஒப்பந்தப்புள்ளியில் 90 பணியாளர்கள் நியமனம் செய்ய 1.83 கோடி ரூபாய் மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. இது மிகவும் அதிகமாகும். இந்த மதிப்பீட்டிற்கான ஒப்புதலை காயல்பட்டணம் நகராட்சி

இரண்டு தீர்மானங்கள் மூலம் வழங்கியுள்ளது என்று தீர்மானங்கள் #1747 (31.1.2019) & #1882 (9.8.2019) ஆகியவற்றை குறிப்பிட்டுள்ளார். இதே காலகட்டத்தில், காயல்பட்டணம் நகராட்சியினை கட்டுப்படுத்தும் திருநெல்வெலி நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அலுவலகத்தின் கீழ் வரும் மற்றொரு நகராட்சியான விருதுநகர் மாவட்டம் ராஜபாளையம் நகராட்சியில் ஜுலை 2019–ல் 303 துப்புரவு பணியாளர்களை நியமனம் செய்ய சுமார் 3 கோடி ரூபாய்க்கு ஒப்பந்தப்புள்ளி தயார் செய்யப்பட்டு, செப்டம்பர் 2019–ல் 2.88 கோடி ரூபாய்க்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கிய நிறுவனத்திற்கு பணி ஆணை வழங்கப்பட்டுள்ளது என்று தீர்மானங்கள் #152 (16.7.2019) & #247 (10.9.2019) ஆகியவற்றை குறிப்பிட்டுள்ளார்.

இதன்மூலம் காயல்பட்டணம் நகராட்சியின் ஒப்பந்தப்புள்ளி அதே பணிக்காக ராஜபாளையம் நகராட்சியின் தொகையை விட சுமார் 98 லட்சம் ரூபாய் அதிகம் என்பது தெரிகிறது. சுயலாப நோக்கில் – விதிமுறைகளை மீறி, இவ்வாறு மிகைப்படுத்தப்பட்ட மதிப்பீடு தயார் செய்யப்பட்டு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டுள்ளது. இந்த முறைக்கேட்டில் ஈடுபட்டுள்ள காயல்பட்டணம் நகராட்சி ஆணையர் மற்றும் பிற அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்கும்படி தங்களை கேட்டுக்கொள்கிறேன்'' என்று தெரிவித்துள்ளார்.

2. மனுதாரரின் மனு தொடர்பான அறிக்கையை அனுப்பிவைக்குமாறு இம்முறைமன்ற நடுவ முறையீட்டு எண்.011/ந/2020 நாள் 20.1.2020 மூலம் காயல்பட்டணம் நகராட்சி ஆணையாளர் கேட்டுக் கொள்ளப்பட்டார். காயல்பட்டிணம் நகராட்சி ஆணையர் தமது 21.2.2020 நாளிட்ட அறிக்கையில்:–

''காயல்பட்டணம் நகராட்சியில் திடக்கழிவு மேலாண்மைப் பணிகளை நல்ல முறையில் செயல்படுத்திட திடக்கழிவு மேலாண்மை திட்டத்தில் நகராட்சி உரக்கிடங்கு இடமான கடையக்குடி (நில அளவை எண்.278/1பி) மற்றும் சிவன் கோவில் தெரு (நில அளவை எண்.392/5) ஆகிய இடங்களில் 3 மெ.டன் கொள்ளளவு கொண்ட மைக்ரோ கம்போஸ்ட் சென்டர் அமைத்திடவும் குப்பைகளை வீடு வீடாக நேரிடையாக சேகரித்திட LCV மற்றும் Battery Operated Vehicle ஆகிய வாகனங்கள் வாங்கப்பட்டு தற்பொழுது பயன்பாட்டில் உள்ளது. மேலும் திடக்கழிவு மேலாண்மைப் பணிகளை செய்திட போதுமான சுகாதாரப் பணியாளர்கள் நகராட்சியில் இல்லாத காரணத்தினால் சுகாதாரப்பணிகளை நல்ல முறையில் செய்திட நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களால் பல்வேறு ஆய்வு கூட்டங்களில் அறிவுறுத்தப்பட்ட அறிவுரைகளின்படி குப்பைகளை சேகரித்திட வாங்கப்பட்ட வாகனங்களை இயக்கிடவும் குப்பைகளை பிரித்து கையாளவும் கூடுதலாக பணியாளர்கள் தேவைப்பட்டதால் நடப்பு ஆண்டுக்கு (20.19.2020) 90 பணியாளர்களை தேர்வு செய்திட மாவட்ட ஆட்சியர், தூத்துக்குடி அவர்களால் அங்கீகரிக்கப்பட்ட விலையில் மதிப்பீடு ரூ.183.00 இலட்சத்திற்கு

தயாரிக்கப்பட்டு மாநில அளவில் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு ஒப்பந்த விதிகளின்படி வரப்பெற்ற குறைந்த ஒப்பந்தப்புள்ளிக்கு மன்ற அனுமதி பெறப்பட்டு வேலை உத்திரவு வழங்கப்பட்டுள்ளது.

தற்பொழுது 90 பணியாளர்கள் நகராட்சியில் வீடு வீடாக குப்பைகளை பிரித்து சேகரம் செய்தல் மற்றும் அதனை வாகனங்களின் மூலம் சேகரித்து நுண் உர செயலாக்க மையங்களுக்கு கொண்டு செல்லுதல் மற்றும் அதனை மக்கும் குப்பைகளை உரமாக்குதல் போன்ற பணிகளை செய்து வருகின்றனர். மேலும் காயல்பட்டணம் நகராட்சியினை குப்பையில்லா நகராட்சியாக்கிட முழு அளவிலான பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன" என்று தெரிவித்துள்ளார்.

3. இந்நேர்வில் மனுதாரர் மற்றும் எதிர் மனுதாரரான காயல்பட்டணம் நகராட்சி ஆணையாளர் ஆகியோரை 26.4.2021 அன்று நேரடி விசாரணைக்கு ஆஜராகுமாறு 17.3.2021 நாளிட்ட அழைப்பாணை அனுப்பப்பட்டது. ஆனால் கொரோனா தொற்று போன்ற காரணங்களால் விசாரணைக்கான தேதி மாற்றம் செய்யப்பட்டு 8.9.2021 அன்று நேரடி விசாரணைக்கு ஆஜராகுமாறு 11.8.2021 நாளிட்ட அழைப்பாணை அனுப்பப்பட்டது. 8.9.2021 அன்றைய நேரடி விசாரணையில் மனுதாரர் கலந்து கொண்டு கீழ்கண்டவாறு வாக்குமூலம் அளித்துள்ளார்.

> “தூத்துக்குடி மாவட்டம், காயல்பட்டணம் நகராட்சியில் துப்புரவுப் பணிகளை மேற்கொள்ள வெளியாட்களைக் கொண்டு பணியாளர்களை நியமிப்பதில் முறைகேடு நடந்துள்ளது. ஒப்பந்தப் புள்ளியின் மூலம் 90 பணியாளர்களை நியமனம் செய்ய 1.83 கோடி ரூபாய் மதிப்பீடு தயார் செய்யப்பட்டு பணியாட்களை நியமனம் செய்துள்ளனர். மேற்கண்ட தொகை மற்ற நகராட்சிகளை ஒப்பீடு செய்யும்போது அதிகமாகும். இதனால் நகராட்சிக்கு இழப்பு ஏற்பட்டுள்ளது. மேற்கண்ட மதிப்பீட்டுத் தொகை எவ்வாறு நிர்ணயம் செய்யப்பட்டது என்கின்ற விவரம் மூலம் முறைகேடு எவ்வாறு அரங்கேற்றப்பட்டது என்கின்ற விவரத்தை தெளிவாக உணர்த்தும்படியும், மேலும் இது சம்பந்தமாக தேவையான நடவடிக்கைகளை எடுத்திடவும், தவறு செய்த அலுவலர்கள் மீது தக்க நடவடிக்கை எடுத்திடவும் இம்முறைமன்றத்தை கேட்டுக்கொள்கிறேன்" என்று தெரிவித்துள்ளார்.

4. காயல்பட்டணம் நகராட்சி பொறியாளர் மற்றும் நகராட்சி ஆணையர் (பொறுப்பு) மற்றும் தற்போது கன்னியாகுமரி மாவட்டத்தில் பேரூராட்சிகளின் உதவி செயற்பொறியாளராகவும் பணிபுரியும் திருமதி. எஸ்.புஷ்பலதா அவர்கள் 8.9.2021 அன்று நடைபெற்ற விசாரணையில் கலந்துகொண்டு கீழ்கண்டவாறு வாக்குமூலம் அளித்துள்ளார்.

> “காயல்பட்டணம் நகராட்சியில் துப்புரவுப் பணிகளை மேற்கொள்ள 1.83 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 90 பணியாளர்கள் ஒரு வருட காலத்திற்கு (2019–2020)

நியமனம் செய்யப்பட்டனர். நகராட்சி நிர்வாக ஆணையரின் ஆணையின்படியும், மேற்கண்ட பணியாளர்களுக்கு மேலே குறிப்பிடப்பட்டுள்ள ரூ.1.83 கோடியிலேயே தினக்கூலி வழங்கப்பட்டது. அதுமட்டுமல்லாமல் துப்புரவு பணியாளர்களுக்கான சீருடை, கையுறை, காலணி போன்ற உபகரணங்களும் மேற்கண்ட மதிப்பீட்டுத் தொகையிலேயே வாங்கப்பட்டது. மேற்கண்ட பொருட்களை வாங்கும் போது நகராட்சியில் உள்ள குழுவின் (Tender Scrutiny committee) மூலம் பரிசீலனை செய்து வாங்கப்பட்டது என்கின்ற விவரத்தை இம்மன்றத்தின் முன் தெரிவித்துக் கொள்கிறேன். மேலும், மேற்கண்ட பொருட்களின் விவரம், பணியாளர்களுக்கு தினக்கூலியாக வழங்கப்பட்ட தொகை மற்றும் 2015–16ல் விடப்பட்ட ஒப்பந்தப்புள்ளியில் கோரப்பட்ட விலைப்புள்ளிகளின் விவரம் ஆகியவற்றை ஒரு வார காலத்திற்குள் இம்முறைமன்றத்தில் சமர்பிக்கிறேன் என தெரிவித்துக் கொள்கிறேன்" என்று தெரிவித்துள்ளார். ஆணையாளர் வாக்குமூலத்தில் தெரிவித்தவாறு மதிப்பீட்டுப் பட்டியலையும் அனுப்பி வைத்துள்ளார்.

மனுதாரரின் மனு அவரது வாக்குமூலம் மற்றும் காயல்பட்டணம் நகராட்சி ஆணையாளரின் அறிக்கை மற்றும் வாக்குமூலம் ஆகியவைகள் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டன.

திடக்கழிவு மேலாண்மைப் பணிகளை செய்திட போதுமான சுகாதாரப் பணியாளர்கள் நகராட்சியில் இல்லாத காரணத்தினால் சுகாதாரப்பணிகளை நல்ல முறையில் செய்திட நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களால் பல்வேறு ஆய்வு கூட்டங்களில் அறிவுறுத்தப்பட்ட அறிவுரைகளின்படி, குப்பைகளை சேகரித்திட வாங்கப்பட்ட வாகனங்களை இயக்கிடவும் குப்பைகளை பிரித்து கையாளவும் கூடுதலாக பணியாளர்கள் தேவைப்பட்டதால் நடப்பு ஆண்டுக்கு (20.19.2020) 90 பணியாளர்களை தேர்வு செய்திட மாவட்ட ஆட்சியர், தூத்துக்குடி அவர்களால் அங்கீகரிக்கப்பட்ட விலையில் மதிப்பீடு ரூ.183.00 இலட்சத்திற்கு தயாரிக்கப்பட்டு மாநில அளவில் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு ஒப்பந்த விதிகளின்படி வரப்பெற்ற குறைந்த ஒப்பந்தப்புள்ளிக்கு மன்ற அனுமதி பெறப்பட்டு வேலை உத்தரவு வழங்கப்பட்டுள்ளது என்றும்

அதுமட்டுமல்லாமல் துப்புரவு பணியாளர்களுக்கான சீருடை, கையுறை, காலணி போன்ற உபகரணங்களும் மேற்கண்ட மதிப்பீட்டுத் தொகையிலேயே வாங்கப்பட்டதாகவும், மேற்கண்ட பொருட்களை வாங்கும் போது நகராட்சியில் உள்ள குழுவின் (Tender Scrutiny committee) மூலம் பரிசீலனை செய்து வாங்கப்பட்டது என்றும் தெரிவித்துள்ள ஆணையாளரின் அறிக்கையினை ஏற்று 90 துப்புரவு பணியாளர்கள் நியமனத்தில் முறைகேடு எதுவும் நடக்கவில்லை என்றும் முறைபடியும், விதிகளின்படியும்தான் நிர்வாகம் செயல்பட்டுள்ளதாகவே இம்முறைமன்ற நடுவம் கருதுகிறது. எனவே, இக்கோப்பின் மீதான நடவடிக்கையை இத்துடன் முடித்து வைக்கலாம் என்று இம்முறைமன்ற நடுவம் முடிவு செய்து அவ்வாறே ஆணையிடுகிறது.

மேலும் நகராட்சியால் இயற்றப்படும் தீர்மானங்களை நகராட்சியில் இணையத்தில் இதுவரை பதிவேற்றம் செய்யாததை இம்முறைமன்றம் கண்டிக்கிறது. இதைச் செய்யத் தவறிய

அலுவலர்கள் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்க நகராட்சி நிர்வாக இயக்குநருக்கு அறிவுறுத்தப்படுகிறது. இனிவரும் காலங்களில் நகராட்சியால் இயற்றப்படும் தீர்மானங்கள் அனைத்தும் இணையத்தில் பதிவேற்றம் செய்திட நகராட்சி ஆணையரை இம்முறைமன்றம் அறிவுறுத்துகிறது.

2022 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 07–ஆம் நாள் என்னால் கையொப்பமிட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

//ஒப்பம்//

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

1) திரு.எம்.எஸ்.முஹம்மது சாலிஹு,
ப.எண்.37, பு.எண்.86, முத்துமாரி செட்டி தெரு,
சென்னை –1.

2) ஆணையாளர்,
காயல்பட்டணம் நகராட்சி, காயல்பட்டணம்.

3) நகராட்சி நிர்வாக இயக்குநர்,
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
நெ.75, சாந்தோம் மெயின் ரோடு,
ராஜா அண்ணாமலைபுரம், சென்னை – 28.

4) இணை இயக்குநர் /ஒருங்கிணைப்பு அலுவலர் (Nodal Officer)
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
நெ.75, சாந்தோம் மெயின் ரோடு,
ராஜா அண்ணாமலைபுரம், சென்னை – 28.

நகல்.
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்,
இகோ/உதிரிகள்

//ஆணைப்படி/அனுப்பப்படுகிறது//

08/03/22
செயலாளர்

08/03/22

தமிழ்நாடு மாநில உள்ளாட்சி அமைப்புகள் முறை மன்ற நடுவர் சென்னை–600 032